விலை ரூபா 2

# நாணயம்

நாணயம் Naanayam

இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சம்மேளன வெளியீடு.

மலர் : 2 வைகாசி 1988 இதழ் : 2

UNIVERSITY OF ... LANKA RECEIVED 17-6-1988 PERIODICALS DIVISION LIBRARY

# சேவைக்கு முதலிடம் பணத்துக்கு இரண்டாவது இடம் கொடுத்து அறுபது லட்சம் மக்களது வறுமையைத் துரத்தியடிப்போம் - பீ. ஏ. கிரிவந்தெனிய

## சேவைக்கு முதலிடமும் பணத்துக்கு இரண்டாவது இடமும் கொடுத்தால் இந் நாட்டிலேயுள்ள அறுபது லட்சம் மக்களின் வறுமையை துரத்தியடிப்பதில் எமக்கு எவ் வித கஷ்டங்களும் இருக்கமாட்டாது.

சி. க. கூ. சங்கங்களின் பத்து வருட காலத்தில் அடைந்த வளர்ச்சியைக் கொண்டாடும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய ஆசிய கடனுதவு கூட்டுறவு சங்க செயலாளரும் இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத் தலைவருமான திரு. பீ. ஏ. கிரிவந்தெனிய மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.'

தொடர்ந்து அவர் உரையாற்றும் போது "நீங்கள் இன்று எனது சேவையைப் பாராட்டி பரிசு வழங்குகின்றீர்கள். இந்த பரிசை பெறுமளவிற்கு என்னை கொண்டு வந்தது நாட்டிலுள்ள கூட்டுறவாளர்களின் ஒத்துழைப்பும். ஆதரவுமே! எனவே இப்பரிசு எனக்கு மட்டும் சொந்தமானதல்ல. இந்நாட்டிலுள்ள நல்ல கூட்டுறவாளர்கள் அனைவருக்கும் சொந்தமானது.

நாங்கள் பரம்பரை பணக்காரர்கள் அல்ல. பெருங்குடும்பத்தை சேர்ந்தவர்களுமல்ல. இருப்பினும் சிறியவர்களாகவே நாட்டுக்கு சேவை செய்ய வேண்டியுள்ளது. கூட்டுறவு சங்கங்கள் மூலம் நல்ல சேவைகள் செய்யக் கூடிய வாய்ப்பிருப்பதனாலேயே எங்களால் சேவை செய்யக் கூடியதாயுள்ளது.

இன்றைய உலகில் எல்லா நாடுகளிலும் பிரச்சினையை நாம் காணலாம். எமது நாட்டில் வறுமை பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இருப்பினும், நாம எல்லோரும் ஒன்றாக சேர்ந்து உழைப்போமாயின், மிகவும் வெகுவான

(8ம் பக்கம் பார்க்க)

### வாசகர்கட்கு எமது புதுவருட வாழ்த்துக்கள் !




## களுத்துறையில் மாவட்ட கூட்டுறவு வங்கி

களுத்துறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாச மாவட்டக் கூட்டுறவு வங்கி அண்மையில் மிகவும் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

களுத்துறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரின் தலைமையில் ஆரம்பமான மாவட்ட வங்கித் திறப்பு விழா வைபவத்தில், இலங்கை சி. க. கூ. சம்மேளனத்தலைவர் திரு. பீ. ஏ. கிரிவத்தெனிய கூட்டுறவுத் திணைக்கள பதில் ஆணையாளர் திரு. எம். அட்டம்பாவல பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு வங்கியைத் திறந்து வைத்தனர்.

மாவட்டத்திலுள்ள கடனுதவு சங்கங்களின் பிரதிநிதிகளும். கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களும், பெருமளவிலான கூட்டுறவாளர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வைபவத்தைச் சிறப்பித்தனர்.

பிரசன்ன



திரு. பீ. ஏ. கிரிவந்தெனிய, திரு. அட்டம்பாவல ஆகியோர் மங்கள விளக்கை ஏற்றி வைக்கின்றனர்.

## மாதம்தோறும் நாணயம்

தமிழ் சிங்களப் புதுவருடத்திலிருந்து நாணயம் மாதந்தோறும் வெளிவரவிருக்கிறது என்பதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம். தை 1983 ல் இருந்து மாதந்தோறும் வெளியிட திட்டமிட்டிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணங்களால் சித்திரைப் புது வருடத்துடன், எமது நாணயம் பத்திரிகை மாதாந்தம் வெளியிடத் தீர்மானித்துள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயம்

## அபிவிருத்தி நடவடிக்கைகள்

இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனம் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள கடனுதவு சங்கங்களின் அபிவிருத்திக்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்தி வருகின்றதென்பதை கூட்டுறவாளர்கள் நன்கு அறிவர்.

வட மாகாணத்தில் ஏற்கனவே அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. ஆனால் கிழ் மாகாணத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்கவில்லை ஏன்? என்று பல கூட்டுறவாளர்கள் கேள்விகளைத் தொடுக்கின்றனர். நியாயமான கேள்விகள்; இக் கேள்விகளுக்கு இன்று பதில் கிடைக்கிறது. 1988, 1989, 1990 ஆகிய ஆண்டுகளில் கடனுதவு சங்க அங்கத்தவர்களது தேவை என்ன? என்பது பற்றிய தகவல்களை உடனடியாகச் சமர்ப்பிக்கும்படி மாவட்டச் செயலாளர்களை சம்மேளனம் பணித்துள்ளதுடன், மேற்படி அபிவிருத்தித் திட்டத்தை நல்ல முறையில் செயற் படுத்த, ஒரு உத்தியோகத்தரையும் நியமித்துள்ளது.

1988 ம் ஆண்டிலிருந்து பரவலாக பல திட்டங்களை ஒரே தடவையில் செயற்படுத்த, சம்மேளனம் தயாராகி வருகிறது. வட கிழக்கு மாகாணங்களுக்கான அபிவிருத்திக் கடன்களை வழங்குவதற்கு சமூக அபிவிருத்திக்கான உதவியளிக்கும் அவுஸ்ரேலிய நிறுவனம் முன்வந்துள்ளது. இதே வேளையில் மன்னார் மாவட்டத்திலுள்ள வறிய அங்கத்தவர்கட்கு உதவியளிப்பதற்கு ''சுவிஸ் இண்டர் கோப்போறேசன் திட்டம்'' தயாராகின்றது.

இன்றைய இலங்கையில் வறிய மக்களது சமூக, பொருளாதார அபிவிருத்திக்காக உழைத்து வருகின்ற இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம், இன்று போல் என்றும் ஏழைகளின் நலனுக்காக பாடுபடுகின்றதொரு அமைப்பாக இருக்கும் என்பதை கூட்டுறவாளர்களுக்கு திடமாகக் கூறிக் கொள்ள நாணயம் விரும்புகிறது.

சம்மேளனம் எடுக்கும் நல்ல திட்டங்களுக்கு நாம் எல்லோரும் கூட்டுறவாளர்கள் என்ற கோதாவில் சம்மேளனத்துடன் கைகொடுப்போம் என்று பிறந்த புத்தாண்டுடன் திடசங்கற்பம் பூணுவோமாக.

— ஆசிரியர் —


## நாணயம்

இல. 3/2, எட்மன்டன் றோட்,
கொழும்பு-06.
தொலைபேசி ; 553005

செய்திப்பத்திரிகை : ''நாணயம்''

ஆசிரியர் :
எஸ். இராஜரெட்னம் பீ. ஏ

வெளியீடு :
சி. க. கூ. ச. சம்மேளனம்

பத்திரிகைக் குழு :
தில்லை நடராஜா
எஸ். ஞானப்பிரகாசம்
ரஜினி முத்துசாமி


## வேப்பங்குளம் மகளிர் சி. க. கூ. சங்க வருடாந்த பொதுக் கூட்டம்

வேப்பங்குளம் மகளிர் சி. க. கூ சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் வேப்பங்குளம் அ. மு. பாடசாலை மண்டபத்தில் தலைவர் ஜனுபா எம். மஸ்முனிசா தலைமையில் இறை வணக்கத்துடன் ஆரம்பமாகியது. கூட்டத்திற்கு முசலி வடக்கு, தெற்கு ப. நோ. கூ. சங்க பொது முகாமையாளரும் மன்னார் மாவட்ட சி. க. கூ. சங்க சமாச நிர்வாக உறுப்பினருமாகிய திரு. S. ஞெபேட் அவர்களும் பீ. பி பொற்கேணி விவசாய விஸ்தரிப்பு நிலைய காரியாலய விவசாய விரிவாக்க உத்தியோகத்தரும் மன்னார் மூர்வீதி றஹ்மத் சி. க. கூ. சங்க உறுப்பினருமாகிய திருமதி P. B. அபூபக்கர் அவர்களும் கூட்டத்தில் விசேட விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

சங்கத்தின் நன்மைகள், நிர்வாக குழுவுக்கு அங்கத்தவர்கள் வழங்க வேண்டிய ஒத்துழைப்பும் உதவியும், மாவட்ட சமாசத்துடன் உள்ள தொடர்புகள், சங்கத்தில் இருந்து கல்வி முகவர்களை தெரிவு செய்தல் கல்வி முகவர்கள் ஆற்ற வேண்டிய பணிகள், போன்ற பல் வேறு விடயங்கள் பற்றி கூட்டத்தில் கலந்து கொண்ட விசேட விருந்தினர்களால் சங்க உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. கூட்ட இறுதியில் புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | ஜனுபா எம். மஸ்முனிசா |
| உபதலைவி | : | ஜனுபா ஏ. லத்தீபா உம்மா |
| செயளாளர் | : | ஜனுபா கே. கதீஜா உம்மா |
| பொருள்ாளர் | : | செல்வி கே. எம். நூறுல் பஸார் |

நிர்வர்க உறுப்பினர்கள்:

செல்வி. கே. எம். றைஹானு
செல்வி. எம். றசீதா
செல்வி. கே. வஜீஹா
ஜனுபா. ஏ. றுக்கியா
ஜனுபா. டப்ளியு. ஜுனைதா

சங்க பொருளாளர் செல்வி. கே. எம். நூறுவ்பசார் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவு பெற்றது.

## சாய்ந்தமருது 6-ம் குறிச்சி அல்-அமீன் க. கூ. சி. வருடாந்தப் பொதுக் கூட்டம்

சாய்ந்தமருது 6 ம் குறிச்சி அல் அமீன் சி. க. கூ. சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் ஜனாப் ஏ. முசம்மில் அவர்கள் தலைமையில் ''றிம்சியா மஹாலில்'' வெகு விமர்சையாக நடை பெற்றது. கூட்டத்தின் விசேட அதிதிகளாக கல்முனை மாவட்ட கூ. அ. உ. ஆணையாளர் திரு. எஸ் ஜ. நித்தியராஜ், கல்முனை மாவட்ட சி. க. கூ. சமாசத் தலைவர் ஜனாப் ஐ. ஏ. ஜப்பார், மற்றும் எம். எம். எம். ஹூசைன் தீன், ஜனாப் வை. எம் ஹனிபா (அதிபர்) ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்ட இறுதியில் பின்வருவோர் புதிய நிர்வாக சபையினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | ஜனாப் ஏ. முஸம்மில் (அதிபர்) |
| உபதலைவர் | : | ஜனாப் எம் ஐ. ஏ. மஜீட் |
| செயலாளர் | : | ஜனாப் யூ. எஸ். ஆதம்பாவ (ஆசிரியர்) |
| பொருளாளர் | : | ஜனாப் எம். ஐ எம். ஹனிபா (உப தபாலதிபர்) |

செயற்குழு உறுப்பினர்கள் :

ஜனாப் ஏ. எல். எம். அலியார் (ஆசிரியர்)
,, எம். ஏ. எம். புஹாரி
,, ஏ மூஹைதின் பாவா

எண்பார்வைக்குழு :

ஜனாப் ஏ. உமர் லெப்பை (கி. சே. உ)
,, யு. எஸ். எம். சுபைர் (வி. சே. உ)
,, எம். ஐ. எம். காசிம்.

### சிந்தியுங்கள்......

கடவுள் நமக்கு என்ன செய்தார் என்று கேட்கிறார்கள். பொதுவாக ஒருவரை நாம் சந்திக்கும் போது ''என்ன சௌக்கியமா? எப்போது ஊரில் இருந்து வந்தீர்கள் என்று கேட்கின்றோம். உடனே அவர் இன்ன தேதியில் வந்தேன் இன்ன தேதியில் புறப்படப் போகிறேன்'' என்று சொல்வார். ஆனால் அவரைப் பார்த்து ''நீங்கள் எப்போது செத்துப்போகப் போகிறீர்கள்'' என்று கேட்க முடியுமா? அப்படி கேட்டால் தான் பதில் வருமா? தாம் மரணமடைகிற திகதியை நம்மால் சொல்ல முடியாமல் இருக்கிறதே அது தான் இறைவன் செய்து இருக்கின்ற நமமை ஒரு வேளை அந்த திகதி நேரம் தெரிந்து இருந்தால் மற்றவன் நம்மை நம்பி கடன் தருவானா நீ இன்ன திகதியில் போகப் போகிறாய் உன்னை நம்பி எப்படி கடன் தருவது என்றல்லாம் கேட்பான்.

தொகுப்பு:-
பொ. ரஞ்சன்
நாகதாழ்வு

ஆதாரம் :- சாவி

''ஒரு தேவைக்காக மாத்திரம் கடனுதவு சங்கத்தைப் பயன் படுத்தக் கூடாது''

-- சாணக்க

கல்முனை மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் சமாசம் சம்மாந்துறை ''அமீர் அலி'' பொது நூலகத்தின்கேட்போர் கூடத்தில் அண்மையில் இம் மாவட்டத்திலுள்ள மாற்று முகவர்களுக்கு முழு நாள் கல்விக் கருத்தரங்கொன்றை நடத்தியது. மாவட்ட நிர்வாக செயலாளர் ஜனாப். ஏ. எஸ். அஸ்கார் அவர்களால் குறுகிய காலத்தில் மிகவும் வியரிசையாக ஒழுங்கு செய்யப்பட்ட இக்கல்விக் கருத்தரங்கு சமாசத்தின் பணிப்பாளர் சபையின் கௌரவ தலைவர் ஜனாப். ஐ. ஏ. ஜப்பார் அவர்களின் தலைமையில் நடை பெற்றது.

இப் பயிற்சிக் கருதரங்கிற்கு விடேச அதிதியாக வரவிருந்த சம்மேளனத்தின் வெளிகள உத்தியோகத்தரும், நாணயம் பத்திரிகை ஆசிரியருமான திரு. எஸ். இராஜரெட்னம் அவர்கள் தவிர்க்க முடியாத சில காரணங்களால் வரமுடியாததையடுத்து சம்மேளனத்தின் உதவி செயலாளர் திரு. சாணக காரியவாசம் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு விரிவுரை நிகழ்த்திய கல்முனை கூட்டுறவு தலைமையகப் பரிசோதகர் திரு. எஸ். கே. ஆனந்தராஜா அவர்கள் கூட்டுறவு தத்துவம் பற்றியும், சம்மேளனத்தினால் வெளியிடப்பட்டுள்ள தமிழிலான கணக்குப் புத்தகங்களை பேணுவது பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறினார். கல்முனை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. இ. நித்தியராஜ், அவர்கள் சி. க. கூ. சங்கங்களின் நோக்கமும், அதன் செயற்பாடுகளும், சங்கங்களைப் பதிவு செய்தலும் எனும் தலைப்பில் விரிவுரை நிகழத்தினார். ஒரு வயதை பூர்த்தி செய்துள்ள கல்முனை மாவட்ட சமாசம் குறுகிய இக்காலத்திற்குள் நன்கு வளர்ச்சியடைந்துள்ளதை காணக கூடியதாகவுள்ளது என்று கூறய அவர் இதற்காக உழைத்த சமாசப் டணிப்பாளர் சபையையும் பாராட்டினார். சில சங்கங்கள் சிக்கனத்தை மறந்து கடன் பெறும் நோக்குடனே மாத்திரமே பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்கின்றன என்றும் இப்படிப்பட்ட சங்கங்களுக்கு தகுந்த விளக்கத்தை கொடுத்து சில காலம் சுயமாக இயங்கிய பின்னரே அவற்றை பதிவு செய்ய அனுமதிக்கப் போவதாகவும் கூறினார்.

பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய சம்மேளன உதவிச் செயலாளர் திரு. சானக்க காரியவாசம் அவர்கள் விரிவுரை நிகழ்த்துகையில், சி. க. கூ. சங்கம் சிக்கனம், கடன், கூட்டுறவு, சங்கங்கள் என்ற நான்கு நோக்கங்களை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டதென்றும். இது மக்களுக்கு

(7 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுவர் சிறுகதை

## "ஓடி விளையாடு பாப்பா"

ஓர் ஊரில் கண்ணன் என்ற மாணவன் ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவன் விளையாடுவதில் சூரன். ஆனல் படிப்பதில் மக்கு. அவனுடைய தந்தை எவ்வளவு கண்டித்தும் அவன் படிப்பில் கவனம் செலுத்தவில்லை.

அடுத்த நாள் வரும் இறுதி ஆண்டு பரீட்சைக்காக எல்லா மாணவர்களும் படித்துக் கொண்டிருந்தார்கள். கண்ணனும் ஆசிரியர் கண்டித்த காரணத்தினல் படிக்கலாம் என்று புத்தகத்தை திறந்தான். அதே சமயம் பக்கத்து வீட்டுப் பையன் ஓடி விளையாடு பாப்பா என்று தொடங்கும் பாரதியாரின் பாடலை படித்துக்கொண்டிருந்தான். அதைக் கேட்ட கண்ணன் "பாரதியாரே ஓடி விளையாடு பாப்பா என்று பாடியுள்ளார். ஆதலால் நாமும் விளையாடிவிட்டு வருவோம்.'! என்று எண்ணி வெளியே விளையாட சென்றன். அவன் மனதில் பாரதியாருக்கு ஜே! என்று கூறி விளையாடினன் கண்ணன்.

மறுநாள் பரீட்சை வினாத்தாளை ஆசிரியர் கண்ணனின் கையில் கொடுத்தவுடனே கண்ணன் முழித்தான், ஏன் என்றல் அவன் தான் படிக்கவில்லையே! அவன் மனது பாரதியாரின் பாடலை நினைத்தது. பின்புதான் அப்பாடலில் வரும் மற்ற வரியான "காலை எழுந்தவுடன் படிப்பு" என்பதை நினைத்து வருந்தியது கண்ணன் மனம். பின்பு கண்ணன் காலை எழுந்தவுடனே படிக்காத நாளே கிடையாது.

செல்வி சே. சுலோஜினி
ஆண்டு 9
மட்/வாழைச்சேனை த. ம. வி.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 8 | | 9 | | ■ |
| 2 | | ■ | 3 | | |
| | ■ | 12 | | ■ | ■ |
| 4 | 11 | | | ■ | |
| 5 | | | ■ | 6 | |
| 7 | | | | | 2 |

பெயர்: .................................................

முகவரி; .................................................

.................................................

மாவட்டம்: .................................................

திகதி:- ............ கையொப்பம்

கவனத்திற்கு :

★ இப்போட்டியில் மாணவர்கள், சி. க. கூ. சங்க அங்கத்தவர்கள் மாத்திரமே கலந்து கொள்ள முடியும்.

★ ஒருவர் ஒரு கூப்பனை மாத்திரமே அனுப்பலாம்.

★ கூப்பன்கள் தபாலட்டையில் ஒட்டப்பட்டு, பாடசாலை மாணவராயின் பாடசாலை முகவரியும், கடனுதவு சங்க அங்கத்தவராயின் சங்க முகவரியும் குறிப்பிடப்பட வேண்டும். விபரங்கள் குறிப்பிடப்படாத கூப்பன்கள் நிராகரிக்கப்படும்.

★ போட்டி சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும் ஆசிரியர் குழுவே பொறுப்பாகும்.

★ சரியான விடையை எழுதும் முதலாவது அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 50/- ம், 2வது, 3வது பரிசாக ரூபா 25/- வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல : 4

இடமிருந்து வலம் :

1. ..............ஒத்துழைப்பு கூட்டுறவின் நல்ல பண்பு.
2. யா.
3. தேர், வாகனம்.
4- கொடை வள்ளல்.
5. ...... . ...ஒரு குரங்கு குழம்பிவிட்டது.
6. .........யும, மாலையும கடவுளை வணங்கு, தலைகீழாயுள்ளது.
7. திரைப்பட நகைச்சுவை மணி குழம்பி இருக்கிறார்.

மேலிருந்து கீழ் :—

1. இக் கனவு நனவாகாதாமே!
6. .........சாய்ந்து போனல் சிலையாகலாம், தலைகீழாயுள்ளது.
8. .........சாஸ்திரி இந்திய கிரிக்கட் வீரர்.
9. இராமன் தம்பி.
10. காதில் அணிவது குழம்பிவிட்டது.
11. ............கர்ம வீரா காமராஜர் குழம்பிவிட்டார்.
12. "நிச்சயம்'! இக் கருத்துள்ள சொல் குழம்பியுள்ளது.

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர், "நாணயம்"
இ. சி, க. கூ. ச. சம்மேளனம்,
இல, 3/2, எட்மண்டன் ரோட்,
கிருலப்பனை,
கொழும்பு-6

### குறுக்கெழுத்துப் போட்டி இல : 3
சரியான விடைகள்

இடமிருந்து வலம் :—

1. சம்மேளனம்
9. வலை
13. சத்துரு
21. தேம்பா
30. தார்
31. தீப்பறவை

மேலிருந்து கீழ் :

1. சமாசம்
3. மேலைத்தேசம்
4. வளரும்
6. மதம்
23. பார்வை

**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்**
விபரம் அடுத்த இதழில்!

### பழமொழிகள்

1. கல்வி வேர் கசப்பானது. ஆனல் அதன் பழமோ ருசியானது.
2 அறிஞன் முதலில் செய்வதை முட்டாள் இறுதியில் செய்கின்றன்.
3. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே.
4. இரவற் சீலையை நம்பி இடுப்புக் கந்தையை எறியாதே!
5. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
6. கோபத்தால் செத்துப்போ, வழக்காடாதே! பசியால் செத்துப்போ. களவு செய்யாதே!
7. உலகில் முட்டாள்கள் இல்லாதிருந்தால் ஒருவன் அறிவாளியைத் தெரிவதெப்படி?
8. பணத்தை எல்லோரும் குறைகூறுகிறார்கள். ஆனல் அதை ஒருவரும் வாங்க மறுப்பதில்லை.
9. அலுப்புப் பார்த்தால் உன் அடுப்பு எரியாது.
10. தூக்கியெறியும் குதிரையைவிட சுமந்து செல்லும் கழுதை மேலானது.

தொகுப்பு: எச். எம். அக்ரம்
மூர் வீதி, சிலாவத்துறை,
மன்னர்.

## மாணவர் சங்கம்

இல. 13. ஏ. கே. சக்திவிநோதன், வவு/ கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் சேமமடுக்குளம்- வவுனியா

இல. 14. இரா. இராமஜெயம், வவு/ கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் - மேமமடுக்குளம், வவுனியா

இல. 15. செல்வி எஸ். நோனு ஷரீனு, மதினு மகா வித்தியாலயம், மடவளை,

இல. 16. பா. றெஜீந்திரதாஸ், சைவப்பிரகாச வித்தியாசாலை, வவுனியா.

இல. 17. கல்யாணி டோமினிக், அ. த. க. பாடசாலை, இராசேந்திரன் குளம், வவுனியா.

இல. 18. பா சுஜீந்திரதாஸ், ம. வி. பாவற்குளம், வவுனியா.

இல. 19. ஏ. ஜே. எம். ரபீக், ம. ம. வி. எருக்கலம்பிட்டி, மன்னர்.

இல. 20. மு. இ. சர்ஜுன், கமு/ அல் அஸ்றத் ம. வி. நிந்தவூர்.

இல. 21. சுமதி பத்மநாதன், ஓமந்தை கொத்தணி ம.வி. வவுனியா.

இல. 22. எம். எஸ். எம். ஹசன், மன்'புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, மன்னர்.

கூப்பன் :

### மாணவர் சங்கம்

பெயர் :- .................................................

முகவரி :- .................................................

பிறந்த திகதி:- ........................ வகுப்பு :- .........

பாடசாலை :- .................................................

மாவட்டம் :- .................................................

கிராமத்திலுள்ள சி. க. கூ. சங்கத்தின் பெயர் :- ............

மேலே தரப்பட்ட விபரங்கள் சரியானவை. நான் இச்சங்கத்தில் சேர விரும்புகிறேன்.

திகதி :- ........................ கையொப்பம்

### சுவிஸ் இன்டர் கோப்பறேசன் திட்டம்

இலங்கை சி. க கூ சங்கங்களது அபிவிருத்தித் திட்டங்கள், நடவடிக்கைகளில் கொண்ட திருப்தி காரணமாக சுவிஷ் இண்டர் கோப்போறேசன், இ. சி. க. கூ. சம்மேளனம் ஊடாக அபிவிருத்திக் கடன்களை வழங்க முன்வந்துள்ளது.

இத் திட்டத்தின் முதற் கட்டமாக மன்னர் மாவட்டத்தில் திட்டத்தைச் செயற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மிகவும் வறிய சங்க அங்கத்தவர்களை 3 வருட கால அடிப்படையில் பொருளாதார சமூக ரீதியாக முன்னேற்றுவதற்கு கைகொடுத்துதவுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இந்த அடிப்படையில் வறிய அங்கத்தவர்களுக்கு 1988, 1989, 1990 ஆம் ஆண்டுகளில் அபிவிருத்திக் கடன்களை வழங்க சம்மேளனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

"சுவிஷ் இண்டர் கோப்பறேசன் திட்டம்" சம்பந்தமாக கலந்துரையாடவும், தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குமாக மன்னர் மாவட்டத்துக்கு விஜயம் செய்த சம்மேளன வட, கிழக்கு மாகாணங்களுக்கான உத்தியோகத்தர் திரு. எஸ், இராஜரெட்ணம், சங்கங்களது தலைவர்களைச் சந்தித்து மேற்படி திட்டம் சம்பந்தமாக விளக்கமளித்ததுடன், மன்னர் மாவட்ட திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். இராஜநாயகம் அவர்களையும் சந்தித்து திட்டம் சம்பந்தமாகக் கலந்துரையாடியதுடன், மேற்படி திட்டத்திற்காக ஆரம்ப நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றார்.

### மாணவர் சங்கம்

இன்று மாணவர் மத்தியில் உள்ள திறமைகளை வெளிக் கொணர்வதற்கு மாத்திரம் மாணவர் சங்கம் என்ற நிலையை மாற்றி மாணவர்கள் கல்வி கற்கும் காலத்திலேயே சிக்கனத்தை கையாண்டு, சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக்கொடுக்கவும் மாணவர் சங்கங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இத்தகைய மாணவர் சங்க அமைப்பொன்றை அகில இலங்கை ரீதியாக அமைத்து அவர்கள் மத்தியிலே உள்ள பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தவும் சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்தவும் "நாணயம்" தீர்மானித்துள்ளது.

இச்சங்கத்தில் 18 வயதுக்கு குறைந்த மாணவர்கள் சேர்ந்து கொள்ளலாம். சேர விரும்புவோர் மாணவர் சங்க விண்ணப்ப கூப்பனை நிரப்பி ஆசிரியருக்கு அனுப்பி வைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமிக்கு வந்த நிலவு ○○○

சிறுகதை

நள்ளிரவின் பெரிய ஆரவாரத்துடன் பெய்து கொண்டிருந்த மழை அவளை திடுக்கிட்டு விழிக்க வைத்தது. எழுந்து யன்னலைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள் வசந்தி. பரந்து விரிந்து கிடந்த ஆகாயம் கொடிய இருளரக்கனுல் சூழப்பட்டு பார்ப்பதற்கே மிகவும் பயங்கரமாய இருந்தது. இடையிடையே தோன்றி மறைந்த மின்னலின் ஒளியில் வெளியே முற்றத்தில் பாய்ந்தோடிய தண்ணீர் கண்களில் பட்டதும் அவளிதயத்தில் இனந்தெரியாத ஒரு குளிர்ச்சி ஏற்பட்டதால் தன்னையறியாமலே உடம்பைத் சிலிர்த்துக் கொண்டாள் வசந்தி. நெடு நேரமாக இருளுக்குள் ஊடுருவி எதையோ தேடிக் கொண்டிருந்த வசந்தியின் கண்களில் மெல்லிதாகப் பட்ட மின்னல் ஒளியிலே தென்பட்ட அந்த உருவத்தை இனங் கண்டு கொள்ள முடியாததால் மனதிலே ஒரு சிறு கலக்கம் ஏற்பட்டது. இருந்தாலும் அதை இனம் கண்டு கொள்ளும் ஆர்வத்துடன் காத்திருந்தாள். பளிச்...... என்று அடுத்த மின்னல்...... அந்த உருவம்! அது... அது...

அவளது தந்தை சோமசுந்தரம் மழைக்காக பல மாதங்கள் ஏங்கியிருந்ததால் அன்று மழை பெய்து கொண்டிருக்கும் போதே அதைப் பொருட்படுத்தாது விட்டிருந்தால் நீர் வடிந்துவிடும். அதனால் வயலுக்குள் தண்ணீரை கட்டி வைக்கும் நோக்கத்துடன் மண்வெட்டியுடன் நனைந்தபடியே சென்று கொண்டிருந்தார். அந்தக் காட்சியைக் கண்டதும் வசந்தியின் இதயத்தை வேதனை ஆட்கொள்ள கண்களிலும் நீர் மல்கியது. பாவம் அப்பா ஒரு ஆண்பிள்ளை இல்லாததாலே கஷ்டப்பட வேண்டியிருக்கு. சிந்தனையுடனேயே திரும்பவும் வந்து படுத்து போர்வைக்குள் தன்னை முடக்கிக் கொண்டாள்.

வேறு எந்த தொழில் வசதியுமற்ற அக் கிராமத்து மக்கள் விவசாயம் செய்வதற்கு வானத்தை நம்பியே வாழ வேண்டியிருந்தது. அந்த வானம் சில வேளைகளில் அவர்களை ஏமாற்றி வேடிக்கை பார்ப்பதும் உண்டு. இப்படியே கிராமத்தில் இரண்டு வருடங்கள் வேளாண்மை விளையாமல் போனதால் வறுமை என்னும் கொடிய கரங்களில் சிக்கித் தவித்த மக்களின் நிலையையும் நினைத்துப் பார்த்துக் கொண்ட வசந்தி: இன்று பெய்த மழையினாலும் சில வேளை இனித் தொடர்ந்து பெய்யப் போகின்ற மழையினாலும் வறுமை நிலை நீங்குவது மட்டுமல்லாமல் தனக்கும் ஏதாவது விடிவு காலம் கிடைக்குமா? என்று ஏக்கப் பெருமூச்சுடன் நினைத்துக் கொண்டாள். கடந்த இருபத்தைந்து வருட காலத்தை எப்படியோ வாழ்ந்து முடித்து விட்டாள். வாழ்ந்தாள் என்பதை விட இயங்கினாள் என்று கூறினால் இன்னும் பொருத்தமாக இருக்கும்.

''அந்தக் குடும்பத்தில் தாய், தந்தை, தங்கை மயூரா, அவளுடன் மொத்தம் நான்கு பேர் மட்டுமே. வசந்திக்கு அங்கு தந்தையின் அன்பையும் அரவணைப்பையும் தவிர வேறு எதுவுமே இல்லை. அவளைப் பெற்றெடுத்த தாய் இருக்கிறாளே தவிர அவளது வாயிலிருந்தோ செயலிலிருந்தோ அன்பான வார்த்தையையோ அன்பையோ அவள் ஒரு நாள் கூட அனுபவித்திருக்க மாட்டாள். உண்மையைச் சொன்னால் தாய்ப் பாசம் என்ற வார்த்தையின் அர்த்தமே அவளுக்குத் தெரியாது. என்னைக் கொடுமைப்படுத்துகின்ற எடுத்ததெற்கெல்லாம் திட்டுகின்ற, அடிக்கின்ற, உதைக்கின்ற அதே அம்மா; தங்கை மயூராவைப் பொறுத்த வரையில் இரட்டிப்பு அன்பையும் பாசத்தையும் அவள் மீது செலுத்துகின்றாள். அதற்கான உண்மைக் காரணம் எனக்கு தெரியாதுதான் என்றாலும் இதற்காக நான் பொறுமைப்படவில்லை வருத்தப்படவுமில்லை. மாறாக சந்தோசமடைகின்றேன். ஏனென்றால் நான் அனுபவிக்கின்ற கொடுமைகளையும் துன்பங்களையும் எனது தங்கை மட்டுமல்ல வேறு எந்தப் பெண்ணுமே அனுபவிக்கக் கூடாது. பாவம் செய்த நான் மட்டுமே அனுபவித்து செய்த பாவங்களை தொலைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தக் கொடுமைகளை எல்லாம் சில வேளைகளில் தாங்கிக் கொள்ள முடியாமலிருக்கும் போது அவள் நினைப்பதுண்டு இந்த வறுமை நிலை நீங்கி விட்டாலாவது தனக்கு இந்த அடிமை வாழ்க்கையிலிருந்து விடுதலை கிடைக்காதா? என்று ஏங்கியிருக்கிறாள். தனக்கென்று ஒருவன் கிடைத்துவிட்டால் தன்னிச்சையாக விருப்பம் போல வாழலாமே என்று அழுதிருக்கிறாள்.

ஆனால்...... விவாக வியாபாரத்தில் அதிக விலை கொடுத்து மாப்பிள்ளையை வாங்குவதற்கு ஏழை அப்பாவால் முடியவில்லை. முன்பு ஒரு முறை அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது. பெண்பார்க்கும் படலத்துடனேயே நிகழ்ச்சி முடிவடைந்தது. அவளது அழகிலோ குணத்திலோ யாரும் குறை காண முடியாது தான். ஆனால் பெண்பார்க்க வந்த போது ஏதேச்சையாக மாப்பிள்ளையின் கண்களில் தங்கை மதுராவின் மோகன உருவம் தென்பட்டு விட்டது. எதுவுமே பேசாமல் எழுந்து சென்ற அவர்களின் தந்தையார் வந்து தனது மகன் உங்கள் இரண்டாவது பிள்ளையை விரும்புவதாகவும் அவளைச் செய்து தரும்படியும் கேட்டார். அப்பா பொறுக்க முடியாத கோபத்தில் ஏசி அனுப்பி விட்டார்.

இப்படி அற்பத்தனமாக சிந்திப்பவர்கள் குறுகிய நோக்கம் கொண்டவர்கள் புற அழகை மட்டுமே நேசிப்பவர்கள். தன்னை விட்டு விலகுவதையே பெரிதும் விரும்பினாள் வசந்தி. ஆனால் சில வேளைகளில் தாயின் கொடுமைகளால் மனதுக்குள்ளேயே புழுங்கிப் புழுங்கிச் சித்திரவதைப் படும்போது கடவுளே... கூன், குருடு, நொண்டி, முடம் என்று கூடவா எனக்கென்று ஒருவன் பிறக்கவில்லை இந்த உலகத்தில் என்று வேதனையாக இருக்கும். அப்போதெல்லாம் அவளுக்கு ஆறுதலாக இருக்கின்ற ஒரே ஒருத்தி அவளது தோழி பக்கத்து வீட்டுப் பூரணம் தான். சிந்தனை வேகத்தின் இடையிடையே பெருமூச்சு விட அவள் இதயம் விம்மித் தணிந்தது. புரண்டு புரண்டு படுத்தாள் வசந்தி. தூக்கம் அவளை விட்டு வெகு தூரம் சென்று விட்டது போல் அவளை ஆட்கொள்ள மறுத்தது.

நாளை விடிந்தால் திருவெம்பாவை ஆரம்பம். அடுத்து வருகின்ற பத்து நாட்களும் அம்மாவும், மதுராவும் விரதம் பிடிப்பினம். எனக்கும் விரதம் பிடிக்க ஆசைதான் ஆனால் அம்மா விடமாட்டா. நான் விரதம் பிடித்தால் ஒவ்வொரு நாளும் கோயிலுக்குப் போக வேணும் நான் கோயிலுக்குப் போனால் வீட்டில் வேலை செய்ய ஆளில்லை என்று விரதம் பிடிக்க விடாமல் தடுத்துப் போடுவா. நான் கடவுளை வணங்குவது அந்தக் கடவுளுக்கே பிடிக்கவில்லை என்றால் நான் எதற்காக கடவுளை வணங்க வேண்டும்? எதற்காக கோயிலுக்குப் போக வேண்டும்?

அவள் சிந்தனை வலைக்குள் சிக்கி விடுபட முடியாமல் தவித்துக் கொண்டிருந்த வேளையில் அறைக்கு வெளியே கேட்ட கர்ணகடூரமான குரலில் அவளது இதயம் பயத்தினால் படபடவென்று வெகு வேகமாக அடித்துக் கொண்டதுடன் படுக்கையில் இருந்து அதே வேகத்துடன் அவளைத் துள்ளி சழவும் வைத்தது...?

தொடரும்

செல்வி சி. ஜெயராணி
மாதர் சி. க. கூ. சங்கம்
இரணை இலுப்பைக்குளம்
வவுனியா.

விரைவில்
நாணயத்தில்.........
"புதிய பாதை"
சிறுகதை
எழுதுபவர்; வவுனியா கணேஷ்

# 'கடன், அன்னியோன்ய உதவி' வேலைத்திட்டம்

எஸ். இராஜரெட்னம், பீ. ஏ.
இ. சி. க- கூ. ச. சம்மேளனம்

அறிமுகம்

1] 75 ஆண்டுகளாக விரிவுபட்ட சரித்திர முக்கியத்துவம் பெற்ற இலங்கையின் க. கூ. ச. இயக்கத்தின் பெருமைக்கும், கௌரவத்திற்கும் சான்றாக க. கூ. சங்கங்கள் மூலமாக விநியோகிக்கப்பட்ட கடன்களை 100% அறவிடப்பட்டதைச் சுட்டிக் காட்டலாம். கடன்களை திருப்பிச் செலுத்துவதில தவணை தப்பிய சந்தர்ப்பங்களில் பிணையாளிகளிடமிருந்து அறவிடுதல், அல்லது கடனாளியின் சொத்துக்கள் மூலமாக அறவிட க. கூ. ச. நடவடிக்கை எடுத்தல் என்பன மிகச் சாதாரணமான வழிமுறைகளாகும். கடந்த காலங்களில் அங்கத்தவர்களின் சேமிப்பு, வைப்பு, பங்கு பணம் ஆகியவற்றிலிருந்து கடன்களைக் கொடுத்துதவிய காரணத்தாலும் அது சங்கத்தின் சொந்த முதல் எனக் கருதப்பட்டதனாலும் அக கடன்களை அறவிடுவதில் எதுவித சிரமமும் இருக்கவில்லை.

எமது இயக்கத்துக்கு இப்போது நாம் செய்யவேண்டிய முக்கியமான காரியம் யாதெனில் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவித்தலும், அதற்காக எமது இயக்கத்துக்கு பாதகமற்றவகையில் நீண்ட காலக் கடன்களை வழங்குவதும். அவ்வாறு வழங்குவதற்கு உரிய கடன் பணத்தை பெருக்கி கூடச் செய்வதும் ஆகும். இந்த நீண்ட காலக் கடன்களை வழங்குவதில் கவனமான நடவடிக்கைகளை நாம் கையாளவேண்டும் என்பது எமக்குப் புதுமையானதல்ல.

எவ்வாறாயினும் இத்தகைய அவதானங்களை நாம் மேற்கொண்டால் 75 ஆண்டுகள் விரிந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும், கிராமிய மக்களுக்கு சேவையாற்றக் கூடிய பிரபல தாபனமாக கணிக்கப்படக் கூடியதுமான க. கூ. சங்கங்களின் கீர்த்திக்கு ஏற்படக் கூடிய குறைபாடுகளை விலக்கிக் கொள்வது அனைவரினதும் முக்கிய கடமையும், உரிமையுமாகும். எமது இப் புதிய நிபந்தனை பற்றி நாம் பெருமைப்படவேண்டும் என்பதுடன் அச் சிந்தனைகளை நல்ல நிலையில் வைத்திருக்கவும் பாதுகாப்பது சம்பந்தமாக ஏனைய உபாயங்களையும், வழிவகைகளையும் காண்பதும், அவற்றை நடைமுறைப்படுத்தும் பொருட்டு உளமார சிந்திக்கவேண்டியதுமான காலம் இப்போது வந்துவிட்டது.

நோக்கம்

2) கடனாளி ஒருவர் மரணத்தினால் அல்லது நிரந்தர இயலாமையினால் பாதிக்கப்படும் சமயங்களில் அவருடைய அல்லது அவரது பிணைகாரருடைய சொத்துக்களுக்கு ஏற்படும் பொறுப்புக்களைப் பாதுகாக்கும் வேலைத் திட்டமென இதனை அழைக்கலாம்.

கடனாளியொருவர் இறந்த இடத்து அக்கடனைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பை இன்னொருவருக்கு அசாதாரணமாக மாற்றுதல் இங்கு காணப்படாததொன்று என்பதுடன் கடனாளியுடன் கடனும் அழிந்து போகும் வேலைத்திட்டம் எனவும் இதனைக் கொள்ளலாம்.

மேலும் இதனை விரித்துக் கூறுவதாயின் சில கடனாளிகளின் கடன்களை அறவிட முடியாமைக்குக் காரணம் அவரது இறப்பு அல்லது நிரந்தர இயலாமையெனின் அக் கடன் பணம் இவ்வேலைத் திட்டத்தின் கீழ் க. கூ. ச. சம்மேளனத்தினால் சங்கத்துக்குச் செலுத்தப்படும் என்பது இத் திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

3) கடன் அன்னியோன்னிய உதவி வேலைத்திட்டம் க. கூ. ச.க்கும் அதன் அங்கத்தவர்களுக்கும் எவ்வாறு பயன்படுகின்றது.

(1) யாராவது கடனாளியொருவர் இறந்தவிடத்து அல்லது நிரந்தர இயலாமைக்கு இட்டுச் செல்லப்படுமிடத்து அவரால் திருப்பிச் செலுத்த முடியாத கடன் வேறொரு அங்கத்துவப் பிணையாளியினால் செலுத்தவேண்டிய அவசியமின்மை.

(2) கடனாளி கூடவே கடனும் அழிந்து விடுதல்.

(3) ஒரு அங்கத்தவருக்கு ஏற்படும் இழப்பினை இன்னொரு அங்கத்தவருக்கு சேவை செய்கிறார் என்னும் கூட்டுறவுக் கொள்கைக்கமைய நடைமுறைப்படுத்தல்.

(4) க. கூ. சங்கத்துக்கு கடன் அறவிடும் மொத்தச் செலவு குறைதல்.

(5) க. கூ. சங்கம் கடனை அறவிட முடியாதவிடத்து க. கூ. ச.வின் ஒதுக்கு நிதிகளுக்கு ஏற்படும் இழப்புக்கள் குறைதல்,

(6) கடனாளிகளின் குடும்ப அங்கத்தவர்கள் பரந்த மனப்பான்மையுடன் விடுதலை பெறுதல்.

(7) தவணைக் கட்டணங்கள் செலுத்துவது க. கூ. சங்கத்தின் அங்கத்தவர்களாகையினால் சங்கங்களின் இலாபங்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குப் பாதிப்பு ஏற்படா திருத்தல்.

### இவ் வேலைத்திட்டத்தில் சம்பந்தப்படுபவர்கள் யார்?

க, கூ. சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற சகல அங்கத்தவர்களும், இவ்வேலைத் திட்டத்திற்கு அங்கத்தவர்களைத்தேர்ந்தெடுக்கும்போது கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

### செயற்படும் அங்கத்தவர்கள்

யாராவது அங்கத்தவர் ஒருவர் கடன் பெறும் சமயத்தில் நல்ல உடல் நலமுள்ளவராகவும் அன்றூடம் வேலைகளை சாதாரணமாக நிறைவேற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

அவர் அன்றூடம் வேலைகளில் இருந்து வேலை நிறுத்தம் காரணமாக, அல்லது தற்காலிகமாக நோய் காரணமாக விலகியிருப்பாராளுல் அத்தகைய சந்தர்ப்பங்களிலும் அவரை வேலைத்திட்டத்தில் தொடர்புபடுத்துதல் பொருத்தமானதே. ஆகையினுல்இவ் வேலைத்திட்டத்தில் சம்பந்தப்படும் யாராவது ஆள் ஒருவர் கடன்பெறும் சந்தர்ப்பம் வருமிடத்து அவர் தூய்மையான உடல்நலம்உள்ளவராகஇருப்பதோடு அன்றூடம் சாதாரண கடமைகளை நிறைவேற்றக் கூடிய ஒருவரரகவும் இருத்தல் வேண்டும்.

### இவ் வேலைத் திட்டத்துடன் தொடர்புபடுத்தப்பட முடியாத கடன்கள்

70 வயதுக்குமேற்பட்ட அங்கத்தவர்களின் கடன்கள் (70 வயதுக்கு முன்னர் பெற்ற கடன் பணத்தை 70 வயதுக்குப் பின்னும் தவணைக் கட்டணங்களாகச்செலுத்தவேண்டுமெனில் அத்தகைய தனியாட்களின் கடன்கள்).

(ஆ) சித்த சுவாதீனமற்ற தனியாள் ஒருவரின் கடன்கள்.

(இ) கடன்பெறும் சந்தர்ப்பத்தில் அங்கத்தவரின் உடல் நலத்தைப்பற்றி திருப்திப்படக் கூடிய சூழல் இல்லையெனில் அத்தகைய அங்கத்தவரின் கடன் பணம்.

(ஈ) ஒரு தனி ஆளின் ஆகக் கூடிய கடன் ரூபா 5000/-க்கு மேற்படுமெனில் அத்தகைய மேலதிகமான பணம்.

(உ) யாராவது ஆள் ஒருவருடைய கடன் திருப்பிச் செலுத்தும் கால எல்லை 15 வடங்களுக்கு மேற்படுமெனில் அத்தகைய கடன் பணம்.

(ஊ) அங்கத்தவரல்லாதோரின் கடன் பணம்.

### தவணைப்பணம் பணம் செலுத்துதல்

கடன் அன்னியோன்னிய உதவி வேலைத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாச முடிவிலும் முழுத் தகைமை பெறும் மீதியில் ரூபா 1000/-க்கு சதம். 65% மாதாந்த தவணைப் பணமாக சங்கம் சம்மேளனத்துக்குச் செலுத்துதல் வேண்டும். சகல க. கூ' சங்கங்களும் ஒவ்வொரு கடனுளியினரும் கடன் மீதியை அவதானத்திற்கெடுத்துத் தவணைப் பணத்தைத் திரட்டி சம்மேளனத்துக்கு அனுப்புதல் வேண்டும். கடன் மீதியென இங்கு கருதப்படுவது கொடுத்த கடனுக்கும் அக்கடனில் இருந்து மீளப் பெற்ற தொகைக்குமுள்ள வித்தியாசமாகும்.

உதாரணம்: கந்தையாவுக்கு 31.08.87 திகதியில் சங்கம் கொடுத்த முழுக் கடன்... ரூபா 5,000.00.

தவணைப் பணம் ரூபா 1,000.00.

தகுதி பெற்ற கடன் தொகை 4.000.00

### 7) இலாபக் கொடுப்பனவு

கடன் அன்னியோன்னிய உதவித் திட்டத்தின் கீழ் தொடர்புபடுத்தப்படும் யாதாயினும் ஒரு க. கூ. சங்கம் இரு சந்தர்ப்பங்களில் இலாபங்களை பகிர்ந்தளிக்கும்.

அங்கத்தவர் ஒருவர் இறக்குமிடத்து அதாவது தகுதி பெற்ற அங்கத்தவர் ஒருவர் (அவருடைய கடனுக்கு உரிய தவணைக் கட்டணங்களை கட்டியிருந்தால்) அவர் 70 வயதுக்கு முன் இறக்க நேரிடும்போது அவ் அங்கத்தவரிடம் இருந்து சங்கம்அறவிடவேண்டிய கடன் பணம் சங்கத்திற்கு சம்மேளனத்திளுல் செலுத்தப்படும்.

(தொடரும்)

மீனவர்கட்கு

## கடன் அடிப்படையில் மீன்பிடி உபகரணம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட 6ம் கட்டை வவுனிக்குளம் மீன்பிடிக் கிராமத்திலுள்ள வறிய சி.க.கூ. சங்க அங்கத்தவர்கட்கு ரூபா 38 000/- பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை சம்மேளனப் பிரதி நிதிதிரு. எஸ். இராஜரெட்னம் வழங்கினூர்.

வெளி மாவட்டங்களிலிருந்து வந்து நிரந்தரமாக குடியேறியுள்ள நன்னீர் மீன்பிடியாளர்களது கடன் விண்ணப்பத்தை பரிசீலனை செய்து இ. சி. க. கூ. சங்க சம்மேளனம் மேற்படி மீன்பிடியாளர்கட்கு முல்லைத்தீவு மாவட்ட சி.க.கூ. சமாசம் மூலமாக இக்கடனை வழங்க முடிவு செய்தது.

கட-ந்த தைப் பொங்கல் தினத்தன்று மேற்படி சங்கத்தால் ஒழுங்கு செயப்பட்டிருந்த மீன்பிடி உபகரணம் வழங்கும் விழாவில் கலந்து கொண்ட விசேட விருந்தினர் திரு. எஸ். இராஜரெட்னம் மீன்பிடி உபகரணப் பொதியை வழங்கி நிகழ்சியை ஆரம்பித்து வைத்தார் கோலகலமாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்த மீன்பிடி உபகரணம் வழங்கும் நிகழ்ச்சியில் மாவட்ட சமாசத் தலைவர் திரு. எஸ். சிவானந்தம். மாவட்டச் செயலாளர் திரு, என். திருநாமம், பகுதிக்குப் பொறுப்பான கிராம சேவை அலுவலர் உதவிச் செயலாளர் (துணுக்காய் உ. அ. அ. பிரிவு) திரு. எஸ். குகநேசன் மாற்றுமுகவர்கள், இயக்குநர் சபை இருப்பில் திரு. செல்லைய்யா, மற்றும் கூட்டுறவாளர்களும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிகளை சங்கத் தலைவர் திரு. முருகேசு நெறிப்படுத்தினூர்.

முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சாமசத்தின் அங்கத்துவ சங்கங்களிலுள்ள விவசாயிகளுக்கு பசளை கிருமிநாசினி, பெற்றுக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனம், முல்லைத்தீவு மாவட்ட சமாசத்திற்கு ரூபா 311.500 வை வழங்கியுள்ளது.

இலங்கைச் சிக்கனவு கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத்தால், புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் பயிர்ச் செய்கைக் கடன் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள இக் கடன் சுமார் 25 சங்கங்களிலுள்ள 445 அங்கத்தவர்சளுக்கு உரம், கிருமிநாசினிகளை கொள்வனவு செய்ய வழங்கப்பட்டது.

இக் கடன் திட்டம் சம்பந்தமாக அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முல்லைத்தீவு மாவட்ட சமாச இயக்குனர் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட சம்மேளன வடகிழக்கு மாகாணங்களுக்கான உத்தியோகத்தர் திரு. எஸ். இராஜரெட்னம் கடன் திட்டம் பற்றி விளக்கமளித்ததுடன் பயிர்செய்கைக்கான கடன் ரூபா3,11 500/- பெறுமதியான காசோலையை முல்லைத்தீவு மாவட்ட சமாச இயக்குனர் சபையிடம் கையளித்தார்.

காலி மாவட்ட சி க.கூ.ச. சமாசத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள சி. க. கூ. சங்கங்களில் உள்ள அங்கத்தவர்கட்கு விவசாயம் சம்பந்தமான விளக்கங்களை அளிப்பதற்கான பயிற்சி வகுப்பு ஒன்றினை காலி கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளரும், காலி மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாசமும் சேர்ந்து ஒழுங்கு செய்திருந்தன.

வீட்டுத் தோட்டம், மிருக வளர்ப்பு தண்ணீர் இறைக்கும். இயந்திரம். மின்சார மோட்டர் எண்ணெய் தெளிக்கும் கருவி போன்றவற்றைக் கையாளும் விதம் போன்ற பல விதமான விளக்கங்களும் இப் பயிற்சி வகுப்பில் வழங்கப்பட்டன.

## நான் உன்னை வாழ்த்துகிறேன்

நாணயமே
உன் புகழ் நானிலம் ஓங்க வேண்டும்.
உன் வரவு மாதமொருமுறை கண்டு – என்
உள்ளமெல்லாம்
உன்மீது பாச அருகி துளிர்க்கிறது

நாணயமே
நாணல் போன்ற உன் நிழல் கண்டு
நாணி நிற்கும் இளம் கைப் பேளுக்கள்
நாணம் அகன்று நடைபோட
நாணய மே நீ உதவிட வேண்டும்

நாணயமே
தர்ம தேவர்களின் வழிகாட்டியோ நீ
தன்னலம் கருதா தாயோ
தரணி முழுவதும் உன் சேவை பரந்துவிட்டதே
தவிக்கும் ஏழ்மைக் கோலங்களை
தகர்த்து விட்டாயே உன் விளக்கத்தால்

நாணயமே
சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின்
சிரசாய் நீ அமைந்து விட்டாயே
சிதைந்து விடாமல் உன் சேவை
சிகரம் போன்று வளர்ந்திட வேண்டுகிறேன.

('கலை ரசிகை' செல்வி நூநூல் பஸார்)

## நல்ல முத்துக்கள்

சோம்பல் உள்ளவன் இரண்டு முட்களும்
இல்லாத கடிகாரம் போன்றவன்
அந்தகைய கடிகாரம்
ஓடிஞல் என்ன; நின்ருல் என்ன? - எகிப்து

★

வாய் என்னும் கூண்டிலே அடைபட்டுக்
கிடக்கும் பயங்கரமான மிருகம்தான் நாக்கு
அந்தக் கூண்டைத் தேவையில்லாமல்
திறக்காதீர்கள் – சிங்செள

+

எவனுடைய இதயம் ஏழைகளுக்காக
இரத்தம் வடிக்கின்றதோ அவனையே
நான் மகாத்மா என்பேன். —விவேகானந்தர்

★

கவிதைகள் வெறும் கூட்டுப் பறவைகள்
பாடல்கள் காற்றுத் தேர் ஏறி, திசை
யெங்கும் திக் விஜயம் செய்யும்
வானம்பாடிகள் - கண்ணதாசன்

ஆதாரம்; குமுதம்.
தொகுப்பு: பிரசன்ரு

## வாசகர் மனம்

நாணயம் ஆசிரியர்க்கு

நாணயம் பத்திரிகையை ஆவலுடன் படிப்பவர்களில் நானும் ஒருவர். இப்பத்திரிகை மாதத்தில் ஒரு முறை வந்து மனதைக் குளிர வைக்க வேண்டும் என்பது என்போன்றவாசகர்களின் விருப்பமாகும்.

ஆசிரியர்க்கு ஒரு பணிவான வேண்டுகோள், குறுக்கெழுத்துப் போட்டி விண்ணப்பத்தின் பின் காணப்படும் பயனுள்ள கருத்துக்கள், வெட்டப்படும் போது கவலையாக இருக்கிறது. எனவே இதற்கு ஏதாவது நடவக்கை எடுக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறேன்,

செல்வி ஜெயா நாகலிங்கம்'
இல. 111
உருத்திரபுரம், பரந்தன்.

☆

கனம் ஆசிரியருக்கு,

தங்களால் வெளியிடப்படுகின்ற 'நாணயத்தில் உள்ள செய்திகளை வாசித்தேன். மிகவும் பயன் உள்ளவையாக இருந்தது. தரமான ஆக்கங்களும் சிந்திக்கவைக்கும் தரமான கட்டுரைகளும் சிறுகதை செய்திகள், சிறுவர் பகுதி ஆகியன அறிவிற்கு ஆற்றல் தூண்டும் அளவிற்கு நாணயம் வளர்ந்து விட்டது எனலாம்,

ஆசிரியர் அவர்களே, படித்து வாசித்து அறிவை விருத்தி செய்யும் களஞ்சியமாக வளரும் நாணயத்தை சுவைக்க விரும்புகிறேன். தயவுசெய்து கடிதம் கண்டதும் மாதா மாதம் வெளியிடப்படுகின்ற சஞ்சிகையை தொடர்ந்து அனுப்பிவைக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். என்னையும் உங்கள் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள.

சிறுவர் பகுதிக்கு ஆட்களை அனுப்புவேன் சேர்த்துக்கொள்வீர்களா?

மு. இ. சர்ஜூன்,
அ. சடித் தோட்டம்,
காலடி, நிந்தவூர-7

★

நாணயம் பத்திரிகை ஆசிரியர் அவாகளுக்கு! நாணயம் தை இரண்டாம் இதழ் பார்த்தேன் அருமையிலும அருமையாக இருந்தது நாணயம் பல திசைகளிலும் ஒளிவீசிக் வளர வேண்டும என வாழ்த்துக்கள் பல. குறிப்பாக சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பும் அதன் சாராம்சங்களும் என்ற கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது. இதனை எழுதிய ஜனுப் எம். சி. எம். இக்பால் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

எஸ், நோனு ஷரீனு சுகுவு
க. பொ. த. (உயர்தரம்) கலை
மதீனு மத்திய கல்லூரி,
மடவளை பசார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையும் இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சியும்

★ நா. பரமானந்தம் ★
பி. ஏ. [இலங்கை]
(ஆசிரியர்---ஆலோசகர்)

(சென்ற இதழின் தொடர்ச்சி)

இலங்கையில் கைத்தொழில் வளர்ச்சி 1978 அளவில் இறக்குமதி தடைகள் தளர்த்தப்பட்டதனால், பாரிய வளர்ச்சி அடைந்தது. 1978 மத்திய வங்கியின் அறிக்கைப்படி கைத்தொழில் துறை உற்பத்தி 9% அதிகரித்துள்ளது. தனியார் துறை, பொதுத் துறை ஆகியன போட்டியிட்டு கைத்தொழிலை அபிவிருத்தி செய்ததனால், தனியார்துறை கைத்தொழில் 14% அதிகரித்து காணப்பட்டது. மேலும் சிறு கைத்தொழில் உற்பத்திகளும் ஏறக்குறைய 6% தினால் உயர்ந்துள்ளது எனலாம்.

இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சியில் கணிசமான அளவு தடையினை ஏற்படுத்திய காரணிகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1) பிரித்தானிய ஆதிக்கத்தின் விளைவாக இலங்கையில் நிலவிய புராதன மரபுகள் வழக்கற்றுப் போனமை,,
2) நவீன கைத்தொழில் உற்பத்திக்குத் தடையாக வெளிநாட்டுப் பொருட்கள் விளங்கியமை.
3) புதிய புதிய வளங்களைக் கண்டறிய ஆய்வுகள் பரந்தளவு மேற்கொள்ளப் பட்டமை.
4) கைத்தொழில் முதலீட்டுக்காக ஒதுக்கப்பட்ட மூலதனம் குறைவாகக் காணப்பட்டமை.
5) உள்நாட்டில் போதியளவு நவீன தொழில் நுட்ப அறிவின்மை.
6) கைத்தொழில் பொருட்களைசந்தைப்படுத்தசிறந்த போக்குவரத்து வசதிகள் கிராமிய, நகர ரீதியில் காணப்படாமை.
6) இலங்கையின் கைத்தொழில் வளத்துக்குத் தேவையானஎரிபொருள் இன்மையும் எரிபொருள் இறக்குமதியில் பாரிய அளவ அன்னியச் செலாவணிக் கரைசலும் காணப்பட்டமை.

இக்காரணங்களினுல்1978க்கு முன்னர் கைத்தொழில் துறையானது பாரிய வளர்ச்சியினை எதிர் நோக்க முடியவில்லை எனலாம். இலங்கையின் கைத்தொழில் அமைப்பு அரச கொள்கை, செயற்றிறன் என்பவற்றை மூன்று கட்டங்களாகப் பிரித்து ஆராயலாம்.

(i) 1956க்கு முற்பட்ட காலப்பகுதி
(ii) 1956-1977 வரையிலான காலப்பகுதி
(iii) 1978க்குப் பிற்பட்ட பகுதி.

20ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் தேயிலை, இறப்பர், தென்னை என்பவற்றைப் பதனிடும் சில கைத்தொழிற்சாலைகள் பெருமளவில் காணப்பட்டன. இவற்றைவிட தீப்பெட்டி, புடவை, சவர்க்காரம், செங்கல், ஒடு என்பவற்றை உற்பத்திசெய்யும் சிலதொழிற்சாலைகள் அரசகட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவந்தன. ஆனால் இரண்டாம் உலக மகாயுத்தம் ஆரம்பித்தபோது கப்பல் சேவைகள்சீர்குலைந்தமையினுல் பொருட்களின் இறக்குமதி தடைப்பட்டது. இதனுல் உள்நாட்டுப் பொருட்களில் தட்டுப்பாடு காணப்பட்டதனுல் அரசு சில தொழிற்சாலைகளை அமைத்தது. பாதணிகள், ஒட்டுப்பலகை, அசற்றிக் அமிலம், கண்ணுடி சில வகை மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்யும் கைத்தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன.

1948ஐத் தொடர்ந்து சீமேந்து. சீனி, உருக்கு, காகிதம்· இரசாயனம் என்பவற்றை உற்பத்தி செய்யும் கைத்தொழிற்சாலைகள் ஆரம்பமாயின. இருந்தும் போதிய இலாபம் ஈட்டாத காரணத்தினுல் கைத்தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதனைவிட கைத் தொழிற் பொருட்களை இறக்குமதி செய்து சந்தைப்படுத்துவதன் மூலம் அதிக அளவு இலாபம் கிடைக்குமென்ற கருத்து தனியாரிடையே காணப்பட்டது. இக்காலப்பகுதியில் இலங்கையின் கைத்தொழிற் முயற்சி பற்றி ஆராய வந்த உலக வங்கிக்குழு 1952ல் சமர்ப்பித்த அறிக்கைப்படி தனியாரும், அரசும் சேர்ந்தே கைத்தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும் என்ற ஆலோசனைகளை வழங்கியது. 1955 வரை இல்ங்கையின் கைத் தொழில் அமைப்பை முன்னேற்ற எந்த விதமான நடவடிக்கையும் காணப்படவில்லை. இதன் விளைவாக 1955ல் மொத்த தேசிய உற்பத்தியில் 4% மாத்திரமே கைத்தொழிலின் பங்கு காணப்பட்டது.

1955ஐத் தொடர்ந்தும் அரசின் கைத்தொழிற் கொள்கையினுல் ஏற்பட்ட மாறுதல்களும் அன்னிய செலாவணிக் கட்டுப்பாட்டின் காரணமாகவும் இறக்குமதிப் பொருட்களின் அளவு கட்டுப்படுத்தப் பட்டமையும், இதன் விளைவாக 1955ஐத் தொடர்ந்து உள்நாட்டுக் கைத்தொழில் துரிதவளர்ச்சியடையலாயிற்று

1957-63 வரையிலான காலப் பகுதியை அரசாங்க கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களின் வளர்ச்சியின் ஆரம்பக் கட்டம் எனலாம். 1963ல் மொத்தமாக 14 அரச கூட்டுத்தாபனங்கள் இருந்தன. இவை 1977ல், 28 ஆக வளர்ச்சியடைந்தன. 1973ஐத் தொடர்ந்து இக் கூட்டுத்தாபனத்தின் சாதனைகள் ஓரளவு அதிகரித்து வந்துள்ளது எனலாம்.

## புதிய அரசின் பொருளாதாரக் கொள்கை

இது பெருமளவு வெளிநாட்டு மூலதனத்துடன் ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் கொள்கையாகக் காணப்பட்டது ஏற்றுமதியைக் கவரும் பொருட்டுப் பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது, ஜனுதிபதியின் கண்காணிப்பின் கீழ் இது நடைபெறுகின்றது.

i) ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட கைத்தொழில் முதலீட்டை அதிகரித்தல்.
ii) கைத்தொழில் சார்பான வர்த்தகத்தை ஏற்படுத்தல்.

இவ்வாணைக்குழுவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் ஏற்படுத்தப்பட்டது இதனுள் எவ்வித கட்டுப்பாடும் இன்றி உள்நாட்டு, வெளிநாட்டில் உள்ளவர்கள் முதலீட்டைமேற்கொள்ளலாம். வெளியிட்டாளர் சேவைப்பிரிவு, பொறியியலாளர் சேவைப்பிரிவு என்பன இவற்றுக்கான ஆலோசனைகளை வழங்குகின்றன. சிறந்த முதலீட்டுச் சேவை, திறமைமிக்க முகாமை, சக்தி வினைத்திறன், வலு அமைப்பு போன்றனவற்றில் சிறந்து விளங்குகின்றது.

இலங்கையின் கைத்தொழிலை அபிவிருத்தி செய்ய உள்நாட்டு முதலீட்டுச் சக்தி போதாது. இதனை அறிந்த அரசு வெளிநாட்டு மூலதனத்தை அதிகரிக்க முனைந்துள்ளது இதன் காரணமாக உள்நாட்டு முதலீடு அதிகரிப்பதிலும் சிக்கல்கள் காணப்படுகின்றன.

1) தொழில் நுட்ப அறிவின்மை
2) போதிய சந்தை வசதியின்மை
3) பயிற்சிபெற்ற தொழிலாளர் குறைவு
4) வளர்ச்சியடைந்த நாடுகளின் போட்டி மனப்பான்மை.

சுதந்திர வர்த்தக வலயத்தில் வழங்கப்படும் வரிப் பாதுகாப்பானது பின்வரும் விடயங்கள் குறித்ததாக இருக்கும்.

1) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சொத்துக்களை உடைமையாகக் கொள்ள எவ்வித வகையும் இல்லை.

2) இறக்குமதி முதலீட்டை மேற்கொள்ளபவர்கள் கட்டுப்பாடின்றிப் பங்குமாற்றம்செய்யலாம்.

3) இறக்குமதிகள் மீது தீர்வைகள் வழங்கப்பட மாட்டாது.

இவ்வலயத்தின் கீழ் அமைக்கப்படுவதற்காகச் சிபார்சு செய்யப்பட்டுள்ள கைத்தொழில் வகைகள்.

1) இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்கள்.

2) காரீயத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்கள்

3) காரீயம், டொலமைற் சிலிக்கா என்பனவற்றைக் கொண்ட பொருட்கள்

4) வாசனைத் திரவியத்தை அடிப்படையாகக் கொண்ட இறக்குமதிப் பொருட்கள்.

இலங்கையில் இதுவரை ஏறத்தாழ 258 முதலீட்டுப் பொருட்களுக்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளன. 1981ல், 42 கைத்தொழில் சான்றுகள் சுதந்திர வர்த்தக வலயத்தில் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன, 1987ல், 8 கைத்தொழில்கள் இன்னும் சேர்க்கப்பட்டுள்ளன. இதற்குப் பொதுச் சந்தைகளாக ஐரோப்பிய பொருளாதாரச் சந்தை. கனடா, துபாய், சுவீடன் என்பனவும் அமையலாயிற்று.

புடவை, டயர், மரத்திலான விளையாட்டுப் பொருட்கள், பட்டை தீட்டப்பட்ட இரத்தினக் கற்கள், தேயிலைப்பெட்டி, மீன்பிடி உபகரணங்கள், நகைகள் என்பனவும் செய்யப்படுகின்றன. அண்மைக்காலத்தில் கொழும்பு நகரில் வேலையற்றவர்கள் விகிதம் 29.6% அதிகரித்துள்ளது. இதற்கு கொழும்பு நகர சனத்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு மட்டுமின்றி பல இடங்களில் இருந்தும் கொழும்புக்கு வேலைதேடி வருபவர்களின் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பும் காரண் மாகும்.

(8-ம் பக்கம் பார்க்க)

---

## சிக்கன கடனுதவு ...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

5. 4 சங்க அங்கத்தவர்களுக்கென யாதேனும் சலுகைகளோ, கடன் வசதிகளோ அளித்திருப்பின் அது பொதுவாக பரிபூரண அங்கத்தவர்களுக்கே உரியதாகும்.

5. 5 பங்குப் பணத்திற்கு வட்டி கிடையாது. எனினும் சங்கத்தின் வருமானத்தில் இருந்து பங்குலாபம் செலுத்தப்படும்.

5. 6 சங்கத்தின் சேமிப்புக் கணக்கில் அங்கத்தவர்கள் செலுத்தும் தொகைக்கு உப விதியின்படி வட்டி செலுத்தப்படும். சேமிப்புக் கணக்கிலுள்ள தொகையை அங்தவர்கள் எந்நேரமும் மீளப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலே குறிப்பிடப்பட்ட ஒழுங்குகள் யாவற்றையும் பின்பற்றி கட்டுறவுப் பரிசோதகர் அங்கத்தவர்களுக்கு உதவியளிக்க கடமைப்பட்டுள்ளார். எனவே, அவரின் உதவியையும் நாடவேண்டும்.

### 6. அங்கத்தவராகச் சேருவதற்குத் தேவைப்படும் தகைமைகள்

சங்கத்தில் அங்கத்தவராகி அதன் பொறுப்பைத் தனித்தும் ஒருமித்தும் ஏற்க அங்கத்தவர்கள் சம்மதித்திருப்பதுடன், அவர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. 1 குறித்த சங்கத்தின் பொதுச் சபையினுல் அவரது அங்கத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருத்தல் வேணடும். (குறித்த கூட்டத்தில் சமூகமாக இருக்க, உப விதிகளின்படி தேவைப்படும் அங்கத்தவர் தொகையைக் கொண்ட கூட்டமே பொதுச் சபையாகும்.)

6. 2 அவர் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

6. 3 சங்கத்தின் நிர்வாக எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

6. 4 நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.

---

## 'நாணயம்' உங்கள் வீட்டுக்கு!

நாணயம் பத்திரிகையை உங்கள் வீட்டுக்குப் பெற்றுப் படிக்க சந்தாதாரராகுங்கள்.

6 மாதம் — 12/-
1 வருடம் — 24/-

தொகுப்புகட்கு:

பத்திராதிபர்- நாணயம்,
இ சி. க. கூ. ச. சம்மேளனம்,
2/3 எட்மண்டன் றோட்,
கொழும்பு- 06.

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

மாவட்டம்: ..............................

இத்துடன் 6மாத/ 1 வருட சந்தாவாக ரூபா.......... அனுப்பி வைத்துள்ளேன்.

திகதி கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாத்தளை மாவட்ட சி. க. கூ. சங்க மகளிர் குழு

தலைவர் : திருமதி. பி. லொக்குபிட்டிய (கலேவெல)
உபதலைவர் : திருமதி. லீலா எதிரிசிங்க (தம்புள்ள)
பொருளாளர் : செல்வி. எச். எம். பொடிமெனிக்கே (டயவத்த)
செயலாளர் : திருமதி. அசோகா பண்டாற (றத்தொட)
நிர்வாகக்குழு : திருமதி. ஹில்டா குணதிலக (மாத்தளை)
திருமதி. எச். எம். சிசில்மெனிக்கே (நாஉல)
செல்வி. ஜ. வீரசேகர (வில்கமுவ)
திருமதி. எச். ஜி. சந்திராவதி (அம்பன்கஹா)
செல்வி. சா. அதிகாரிநயக்க (பல்லேபொல)
திருமதி. வயலட் சில்வா (உக்குவெல).

## சி. க. கூ. சங்க மகளிர் குழு மதுரங்குளி

தலைவி : பிறேமலதா ரத்நாயக்க
உப தலைவி : எம். ஏ. தயாசீலி
செயலாளர் : டப்ளியு. கெலிஸ்டா பெர்ணந்து
உதவிச் செயலாளர் : திலகா ஏக்கநாயக்க
நிர்வாகக்குழு : ப்லினி பெர்ணந்து
உதேஷிகா சிராணி
வியலாவத்தி

## ஓமந்தை-மரையடித்த குளம் சி. க. கூ. சங்கம்

தலைவர் : ஏ. கனகையா
உப தலைவர் : ஈ. தர்மலிங்கம்
செயலாளர் : த. கதிர்காமநாதன்
பொருளாளர் : செ. நல்லையா
வ. நாகலிங்கம்
த. சேனுதிராசா
ச. முத்துராசா

## கதிரிப்பாய் சுப்பிரமணிய சி. க. கூ. சங்கம்-கோப்பாய்

தலைவர் : திரு. த. பரஞ்சோதி
செயலாளர் : செல்வி. க. மகேஸ்வரி
பொருளாளர் : திரு. த. பரஞ்சோதி
நிர்வாக சபை உறுப்பினர்கள் :-
திருமதி. சி. இரத்தினம்
செல்வி. க. பரமேஸ்வரி
செல்வி. க. யோகேஸ்வரி
செல்வி. திலகேஸ்வரி

## சூசைப் பிள்ளையார் குளம் சி. க. கூ. சங்கம் வவுனியா

தலைவி : செ. டெய்சிராணி
உபதலைவி : பா. இந்திராணி
செயலாளர் : ம. தர்மகுலதேவி
பொருளாளர் : சு. விமலாம்பிகை
நிர்வாகக்குழு உறுப்பினர்கள் :-
க. தனலட்சுமி
சி. சுமதி
தி. கலா
க. சிவனம்மா
அ. கிருஷ்ணம்பாள்
க. சிவபாக்கியம்

## அனுராதபுரம் சி. க. கூ. ச. சமாகம் அனுராதபுரம்

கௌரவ தலைவர் : திரு. சி. எம். சி. பண்டார
கௌரவ உபதலைவர் : திரு. உபாலி தனபால
கௌரவ இயக்குனர் : திரு. பி. எம். திசாநாயக்க
,, திரு. கே. தர்மதாச
,, திரு. வீ. டிசுகிரிபண்டா
,, திரு. ஆர். பீ. ஹேமபால
,, திரு. அத்துகோறளை
,, திரு. டி. எப். விஜேசிங்க
,, திருமதி. எம். புஞ்சகுமாரி ஹாமி

## விடத்தல் தீவு சி. க. கூ. சங்கம்—மர்ஞர்

தலைவர் : திரு. ஞா. பிரான்சிஸ்
உப தலைவர் : திரு. நீ. சீமான்பிள்ளை
செயலாளர் : திரு. க. துரைராசா
பொருளாளர் : திரு. யோ. கியோமர்பயஸ்
நிர்வாகக்குழு : திரு. றெபின்சன்
திரு. தே. பிறேம்குமார்
திரு. அ. யோசப்கில்லறி

# சிக்கனகடனுதவுகூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பும் அதன் சாராம்சங்களும்

### தை இதழின் தொடர்ச்சி...

**4. சி. க. கூ. சங்கத்தையும் அதன் உபவிதிகளையும் பதிவு செய்வதற்குக் கோரல்**

4. 1 * 1983 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ந் திகதி திணைக்களத்தினால் விடப்பட்ட 273 ஆம் இலக்கத்தைக் கொண்ட சுற்றறிக்கையில் 5 வது ஒழுங்குக்கு அமைய நிர்வாக சபை விண்ணப்பத்தைத் தயாரித்து பதிவு செய்யக் கோரல் வேண்டும். அதன் விபரங்கள் வருமாறு:-

* பதிவு செய்யக்கோரும் பத்திரம் இரு பிரதிகளாக இருத்தல் வேண்டும்.

* குறித்த சங்கத்தினைப் பதிவு செய்ய வேண்டுமென கோரிக்கை நிறைவேற்றப்பட்ட கூட்ட அறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றும் சமாப்பித்தல் வேண்டும். அந்த வகையில் விசேடமாக இந்த விபரத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

* அந்த உபவிதிகளை வாசித்து விளங்கி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

* குறித்த கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உப விதிகளின் இரு பிரதிகள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

### ★ ஜனாப் எம். சி. எம். இக்பால் ★

கூட்டுறவு உதவி ஆணையாளர்

* அதேபோன்று குறித்த சங்கத்தின் உத்தியோகத்தரும் நிர்வாக சபையில் தெரிந்தெடுக்கப்பட்டமை பற்றி அவ்வறிக்கையில் குறிப்பிடப்படடிருத்தல் வேண்டும்.

* அச் சங்கத்தின் காரியாலயம் அமைந்திருக்கும் இடத்துக்கு வந்தடையக் கூடிய குறுகிய பாதை யாதென விளக்கப்பட்டிருக்க வேண்டும்.

* குறித்த சங்கம் ஆரம்பிக்கப்பட்டது முதல் பதிவு செய்யும் வரை அதன் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய அறிக்கையும், ஜனத்தொகையின் பிரதியும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

* குறித்த சங்கத்தின் உத்தியோகத்தர் உட்பட, நிர்வாக சபையினர் பற்றிய விபரங்களும், அவர்கள் அப்பதவியை வகிக்கத் தகுந்தவர்கள் என்பது பற்றியும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

* குறித்த சங்கம் பொருளாதார ரீதியில் நடாத்தக் கூடிய அமைப்பு என்பதைக் காட்டக் கூடிய ஒரு சாத்தியக் கூற்றறிக்கை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**5 சங்கத்தின் நிதி**

5. 1 அங்கத்தவர்கள் இச்சங்கத்தில் சேரும்போது பிரவேசப் பணமாக ஒரு தொகையையும், (உதாரணமாக ரூ 10/-) உப விதிக்கமைய பங்குப் பணமும் செலுத்துதல் வேண்டும்.

5. 2 பங்குப் பணம் ஒரே தடவையில் செலுத்த முடியாதவர்கள் வசதிக்கேற்ப, தவணை அடிப்படையில் செலுத்தி முடிக்கலாம். உதாரணமாக பங்குப் பணம் ரூ. 100/- ஆயின், அதனை ஒன்றுக்கு மேற்பட்ட தவணைகளில் உப விதிகளில் அடங்கியபடி செலுத்தி முடிக்கலாம்.

5. 3 எந்தவொரு அங்கத்தவராவது தமது பங்குப் பணம் முழுவதையும் செலுத்தி முடிக்க முன்னர், சங்கத்தின் பரிபூரண உறுப்பினராகக் கருத முடியாது.

( 6ம் பக்கம் பார்க்க )

### ஒரு தேவைக்...

(2ம் பக்கத்தொடர்ச்சி)

உதவி செய்கின்ற நிறுவனம் என்றும் கூறினார். சி. க. கூ. சங்கங்கள் பல வகையான சேவைகளை செய்வதற்கு பயன்படும். ஒரே தேவையை நிறைவு செய்வதற்கு மட்டும் இச் சங்கங்களை பயன்படுத்தக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டார். தனி மனிதனால் தன்னுடைய தேவைகளை தானே நிறைவு செய்ய முடியாது. ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலமே தேவைகள் நிறைவு பெறும். இவற்றை மாற்று முகவர்கள் ஒவ்வொரு சங்கங்களுக்கும் சென்று விளக்க வேண்டும் என்றும் கூறினார்.

இக்கருத்தரங்கில் அம்பாறை வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமையாளர், அம்பாறை மாவட்டத் சமாசத் தலைவர் உட்பட மற்றும் பல விரிவுரைகளை நடத்தினர். ஒவ்வொரு விரிவுரையின் போதும் பயிற்சியாளர்களினால் கேட்கப்பட்ட பல்வேறு வகையான கேள்விகளுக்கு விரிவுரையாளர்களினால் விளக்கங்கள் வழங்கப்பட்டன. சமாசத்தின் கௌரவ உறுப்பினர்களான ஜனாப். வை. எம். ஹனிபா, ஜனாப். ஏ. அமீர் மோலா, திரு. பி. சண்முகம், ஜனாப். எம். எம். எம். ஜெமீல், ஜனாப். எம். எம். ஏ. சமட், ஜனாப். எஸ். வாகிட் ஆகியோரும் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். கருத்தரங்கு மாற்று முகவர்களில் ஒருவரும், கிராமிய வங்கி முகாமையாளருமான ஜனாப் மு. இ. ஆதம்லெவ்வை அவர்களது நன்றியுரையுடன் நிறைவு பெற்றன.

## நாணயமே நீ வாழ்க!

நாணயமே நீ வாழ்க உனது சேவை
நாட்டுக்கு என்றென்றும் கிடைக்க வேண்டும்
வானுயர்க என்றுன்னை வாழ்த்துகின்றேன்
வளர்கின்ற சமுதாயம் சிறப்பாய் வாழ
நீனினைத்துச் செய்கின்ற பணிகளிங்கு
நிலையான தாக்கத்தை தோற்ற வேண்டும்
உன்னுடையும் உறையுளும் மனிதா வாழ்வின்
உயர்வான தேவைகளாம் என்றுணர்ந்தோம்.

வானோக்கி இருக்கின்ற பயிரைப்போல
வாடி விழும் ஏழைகளின் வாழ்வை மாற்ற
நீநோக்கம் கொண்டுயர்ந்த சேவையாற்றி
நிமிர்ந்து நடை போடுகின்றாய் தளர்ச்சி வேண்டாம்
தேனூடிச் சுவைக்கின்ற வண்டினம் போல்
சிறப்பான உன் கருத்தில் மூழ்கி நாங்கள்
கூறுன சிந்தனையை திமிர்த்தி இந்த
குவலயத்தில் பெருமையுடன் வாழ வேண்டும்.

சிக்கனத்தைச் சேமிப்பின் சிறப்பை இங்கே
சிறுவருக்கு எளிதாக விளங்க வைக்க
பக்குவமாய் இனிக்கின்ற பாகைப் போல
பரிசுகளை வழங்கியுமே ஊட்டுகின்றாய்
முக்கியமாய் எதிர்காலம் அவர் தம் கையே

முழு நாட்டின் வளர்ச்சிக்காய் விதைக்கும்
தக்கபடி அறுவடையில் வெற்றி விந்து கிட்டும்
தயாபரனின் ஆசியது உனக்கு உண்டு.

திருமதி. A. பாத்திமாபீபி,
மூர்வீதி சிக்கன கூட்டுறவு கடனுதவு சங்கம்,
மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயம்

வைகாசி 1988
மலர் : 2
இதழ் 2
விலை : ரூ. 2-


## முல்லை. மாவட்ட சமாசத்தினூடாக விவசாயிகளுக்கு உரம், கிருமிநாசினி?

முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாசத்தின் அங்கத்துவ சங்கங்களிலுள்ள விவசாயிகளுக்கு பசளை, கிருமிநாசினி பெற்றுக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனம், முல்லைத்தீவு மாவட்ட சமாசத்திற்கு ரூபா 311 500 வை வழங்கியுள்ளது.

இலங்கைச் சிக்கனவு கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளத்தால், புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ், பயிர்ச் செய்கைக் கடன் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள இக் கடன் சுமார் 25 சங்கங்களிலுள்ள 445 அங்கத்தவர்களுக்கு உரம் கிருமிநாசினிகளை கொள்வனவு செய்ய வழங்கப்பட்டது.



எஸ். ராஜரெட்னத்திடமிருந்து விவசாயக் கடனுக்கான காசோலையை சமாசத் தலைவர் பெற்றுக் கொள்கிறார்

இக் கடன் திட்டம் சம்பந்தமாக அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முல்லைத்தீவு மாவட்ட சமாச இயக்குனர் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட சம்மேளன வடகிழக்கு மாகாணங்களுக்குக் கான உத்தியோகத்தர் திரு எஸ். இராஜரெட்னம் கடன் திட்டம் பற்றி விளக்கமளித்ததுடன், பயிர்ச் செய்கைக் கான கடன் ரூபா 3,11,500:- பெறுமதியான காசோலையை முல்லைத்தீவு மாவட்ட சமாச இயக்குனர் சபையிடம் கையளித்தார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் எம்மால் பிரச்சினைகளைக் கடந்து முன்னேற முடியும் என்பதில் சந்தேகமில்லை.

கூட்டுறவாளர் என்ற அடிப்படையில் கூட்டுறவின் வளர்ச்சிக்கு, நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு என்னால் செய்யக் கூடிய உதவிகளைச் செய்து தருவேன் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.''

மேலும் அவரது உரையில், கடந்தகால அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட வட மாகாணத்திற்கு நாங்கள் விஜயம் செய்து 1000 க்கும் மேற்பட்ட சி. க. கூ. சங்கங்களின் அங்கத்தவர்களை சந்தித்து, மீண்டும் அப்பகுதிகளில் சமூக அபிவிருத்தி வேலைகளை ஆரம்பித்தோம். இன்று அவர்கள் எங்களுடன் சேர்ந்து சிதைவுபட்ட வடமாகாணத்தை கட்டியெழுப்ப முன்வந்துள்ளார்கள் என்று குறிப்பிட்டார்.

பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்ட இவ்விழாவில், ஆசிய கடனுதவு சமாசப் பிரதிநிதிகள் திரு. ஜோன் ஹோக் தலைமையில் கலந்து கொண்டனர். கேகாலை மாவட்ட சமாசம் ஒழுங்கு செய்திருந்த இப் பெரு விழாவை, கேகாலை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எம். யூ. சீ. குறுப்பு ஆரம்பித்து வைத்தார்.

பிரசன்ன

அரசின் புதிய...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு நகரின் வேலை வாய்ப்பினை கைத்தொழிலினால் அதிகரிப்பது மட்டுமன்றிப் பல சேவைகளை அதிகரிப்பதனால் ஏற்படுத்த முடியும். பாரிய கொழும்பு அபிவிருத்தித் திட்டம் பூரணமாக நிறைவேற்றப்படும்பொழுது அதாவது 2001ம் ஆண்டில் இதன்மூலம் 1620000 ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விருத்தியானது பின்வரும் குறிக்கோள்கள் கொண்டதாகும்.

அ) வீட்டுத்துறையின் வருவாயையும், வேலை வாய்ப்பையும் அதிகரித்தல்.

ஆ) எல்லோருக்குக்குறைந்த பட்சம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வசதிபடைத்த வீடுகள் அமைத்தல்.

இ) எல்லா வீடுகள் தொழிற்சாலைகளுக்கு நீர்வசதி அளித்தல்.

ஈ) நகரத்தின் சுகாதார வசதிகளை அளித்தல்.

உ) போக்குவரத்து வசதிகளை அமைத்தல்

ஊ) சூழல் மாசடையாமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்.

எ) கைத்தொழில் வளர்ச்சி ஆதியனவும் ஏற்பட்டு வேலை வாய்ப்பை அதிகரிக்கும்.

புதிய அரசின் பொருளாதாரக் கொள்கையானது வேலை இல்லாப் பிரச்சினைக் குரியதுமான தீர்வு காண்பதனையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. இதற்கு அடுத்தபடியாக பொருளாதார வளர்ச்சி வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் ஆகிய குறிக்கோள்கள் இடம் பெறுகின்றன.

## மாகாண கல்வி பயிற்சி நிலையம்

தமிழ் மாவட்டங்களிலுள்ள சி. க. கூ. சங்கங்களின் கல்விப் பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதற்கும், அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்குமாக பரந்தன் பல நோக்கு கூட்டுறவு சங்கக் கட்டடத்தில் தற்காலிக பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இப் பயிற்சி நிலையத்தின் பணிப்புரையாக ஒய்வு பெற்ற கூட்டுறவுத் திணைக்கள சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் அவர்களை சம்மேளனம் நியமித்துள்ளது.

உடனடியாக கல்விப் பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதற்கு தற்காலிகமாக பரந்தனில் அமைக்கப்பட்டுள்ள பயிற்சி நிலையத்தில் மாவட்டச் செயலாளர், உதவிச் செயலாளர், இயக்குனர் சபை உறுப்பினர்களுக்கான பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளை திரு. எஸ். ஞானப்பிரகாசம் எடுத்து வருகின்றார்.

### வவுனியாவிற்கு 10 லட்சம் ரூபா

வவுனியா மாவட்டத்திலுள்ள சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு மிளகாய் பயிர்ச் செய்கைக்கான கடனுகை பத்து லட்சம் ரூபாவை இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின சம்மேளனம் வழங்கியுள்ளது.

திரு. எஸ். சுப்ரமணியம் தலைமையிலான வவுனியா மாவட்ட சி. க. கூ. சமாச இயக்குனர் சபையினரின் முயற்சியினால், ஒருவருக்கு ரூபா 2000 வீதம் 500 அங்கத்தவர்கட்கு இக் கடன் தொகை வழங்கப் பட உள்ளது.

இக் கடன் வழங்குவது சம்பந்தமாக நடைபெற்ற கூட்டங்களில் கலந்துகொண்ட சம்மேளனப் பிரதிநிதி திரு. எஸ். இராஜரெட்னம் குறுகிய காலத்தில் மிகத் துரிதமாக முன்னேறிக் கொண்டு வருகின்ற வவுனியா மாவட்ட சமாசத்துக்கு, வறிய அங்கத்தவர்களது அபிவிருத்திக்காக மேலும் பல அபிவிருத்தித் திட்டங்களைத் தான் தயாரித்து வருவதாகவும் எதிர் காலத்தில் அத் திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் அதற்கு கூட்டுறவாளர்களின் ஒத்துழைப்பைக் கோருவதாகவும் குறிப்பிட்டார்.

மிளகாய்ப் பயிர்ச் செய்கைக்கான கடன் தொகை ரூபா பத்து லட்சத்துக்கான காசோலை கேகாலையிலுள்ள சி. க. கூ. தேசிய பயிற்சி ஆய்வு நிலையத்தில் நடைபெற்ற மாவட்ட சமாசத் தலைவர்கட்கான மாநாட்டில் வைத்து இலங்கை சி. க. கூ. சம்மேளனத் தலைவர் திரு. பீ. ஏ. கிரிவந்தெனிய அவர்களால், வவுனியா மாவட்ட சி. க. கூ. சமாசத் தலைவர் திரு. எஸ். சுப்ரமணியம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

(பிரசன்ன)

## மாவட்ட சமாசத் தலைவர்கட்கான கூட்டம்

இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் மாவட்ட சமாசத் தலைவர் கட்கான ஒரு நாள் கூட்டம். சம்மேளனத் தலைவர் திரு. பீ. ஏ. கிரிவந்தெனிய தலைமையில் கரண்டுபொன. கேகாலையில் உள்ள சி. க. கூ. சங்க பயிற்சி ஆய்வு நிலையத்தில் நடைபெற்றது.

''மாகாண சபைகளும், சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களும்'' என்ற தலைப்பில் மாவட்ட சபைத் தலைவர்கள் கலந்துரையாடினர். கூட்டத்தில்மாவட்டசமாசநிலைமைகள் உத்தியோகத்தர் நியமனம், அபிவிருத்தி திட்டங்கள் போன்ற விடயங்களும் கலந்துறையாடப்பட்டன.

தமிழ்ப் பகுதிகளிலிருந்து கல்முனை, வவுனியா, மன்னார், மாவட்ட சமாசத் தலைவர்கள் கலந்துகொண்டு தத்தமது பிரதேசங்களின் நிலைமைகளை விளக்கினர் என்பது குறிப்பிடத்தக்கது,

மேற்படி தலைவர்கட்கான கூட்டத்தில் சம்மேளனப் பொதுச் செயலாளர் திரு. ரஞ்சித் ஹெட்டியாராச்சி, சம்மேளன புனர்வாழ்வுத் திட்ட இணைப்பதிகாரியும், மாகான கல்வி பயிற்சி நிலைய இயக்குனருமான திரு. டீஸ். ஞானப்பிரகாசம், சம்மேளனத்தின் வடகிழக்கு மாகாணங்களுக்கான வெளிக்கள உத்தியோகத்தர் த்ரு.எஸ் .இராஜரெட்னம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## வவுனியாவில காகிதாதிகள்

வட மாகாணத்திலுள்ள சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவையான காகிதாதிகள், பதிவேடுகள் பேரேடுகள் போன்றவற்றை வவுனியா மாவட்ட கூட்டுறவு வங்கியில் பெற்றுக் கொள்ள வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. என்பதை வடமாகாணத்திலுள்ள அனைத்து கடனுதவு சங்கங்களுக்கும், கூட்டுறவு வங்கிகளுக்கும் அறியத் தருகிறோம்.

### விவசாயப் பயிற்சி

காலி மாவட்ட சி. க. கூ. ச. சமாசத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள சி. க. கூ. சங்கங்களில் உள்ள அங்கத்தவர் கட்கு விவசாயம் சம்பந்தமான விளக்கங்களை அளிப்பதற்கான பயிற்சி வகுப்பு ஒன்றினை காலி கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளரும், காலி மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாசமும் சேர்ந்து ஒழுங்கு செய்திருந்தன.

வீட்டுத் தோட்டம், மிருக வளர்ப்பு, தண்ணீர் இறைக்கும் இயந்திரம், மின்சார மோட்டார் எண்ணை தெளிக்கும் கருவி போன்றவற்றைக் கையாளும் விதம் போன்ற பல விதமான விளக்கங்களும் இப்பயிற்சி வகுப்பில் வழங்கப் பட்டன.

இப்பத்திரிகை இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத்திற்காக இல. 201, டாம் வீதி, கொழும்பு-12 ல் அமைந்துள்ள குமரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org